කොළඹ මහ නගර සභාවේ
125 වැනි ජයන්තියේ දී
ජනාධිපති ශ්‍රීමත් රණසිංහ ප්‍රේමදාස මැතිතුමා විසින්
පවත්වන ලද කථාව
1990 දෙසැම්බර් 15 වැනි දින

கொழும்பு மாநகர சபையின் 125 ஆவது ஆண்டு விழாவின்போது அதிமேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஆற்றிய உரை
1990.12.15

# ADDRESS OF HIS EXCELLENCY RANASINGHE PREMADASA, PRESIDENT, AT THE 125TH ANNIVERSARY CELEBRATIONS OF THE COLOMBO MUNICIPAL COUNCIL

15th December, 1990

BKT 0117
25/08/2023

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

# කොළඹ මහ නගර සභාවේ 125 වැනි ජයන්තියේ දී ජනාධිපති ශ්‍රීමත් රණසිංහ ප්‍රේමදාස මැතිතුමා විසින් පවත්වන ලද කථාව—1990 දෙසැම්බර් 15 වැනි දින.

කොළඹ මහ නගර සභාව, දැන් අවුරුදු 125ක් මුළුල්ලේ අපේ ජනතාවට සේවය කර තිබෙනවා. එය අපේ ප්‍රමුඛ පළාත් පාලන ආයතනය බව අප දන්නවා. කොළඹ මහ නගර සභාව, අපේ දේශපාලන සංවර්ධනය පිළිබිඹු කරන කැඩපතක් හැටියට හඳුන්වන්න පුළුවන්. යටත් විජිත පාලන යුගයේ සිට නූතන යුගය දක්වාම, අපේ සෑම ඉදිරි පියවරක්ම, කොළඹ මහ නගර සභාවේ සංවිධානය තුළත්, ස්වභාවය තුළත් සටහන් වී තිබෙනවා.

අද, මේ අවස්ථාවට සහභාගී වෙන්න තමුන්නාන්සේලාගෙන් මට ලැබුණු ආරාධනය පෞද්ගලික වශයෙන් මට ඉතාම අර්ථවත් වන, වැදගත් වන එකක්. දේශපාලන වශයෙන් මා පළාත් පාලනයෙන් බිහිවුණු දරුවෙක්. ඒවාගේම, මා කොළඹ නගර සභාවෙන් දේශපාලන "උපාධිය" ලබපු පුද්ගලයෙක්. මගේ මුල් දේශපාලන ආකල්ප හැඩගැසුණේ මෙතැනදී. මගේ මුල් දේශපාලන පාඩම් ඉගෙනගන්න ලැබුණේ මෙතැනදී. සමාජ ජීවිතයට අදාළ සාරධර්මවල වටිනාකම මට ඉගෙන ගන්න ලැබුණේ මෙතැනදී. ජනතා සේවකයෙකු හැටියට යම් කාර්යභාරයක් ඉටු කරන්න බලාපොරොත්තු වන සෑම දෙනාටම ඉතාම වැදගත් වන සත්‍යයක් මා අවබෝධ කර ගත්තේත් මෙතැනදීයි. සාරධර්ම පදනම් කරගෙන උසස් පරමාර්ථ උදෙසා කරන පොදුජන සේවය තමයි, එකම අර්ථවත් දේශපාලනය. එය තමයි, මා කොළඹ මහ නගර සභා දේශපාලනයෙන් ඉගෙන ගත්. වැදගත් සත්‍යය. මේ ඉගෙනුම ලබන්න පුළුවන් හොඳම පාසල හැටියට පළාත් පාලනය හඳුන්වන්න පුළුවන්.

මා පළාත් පාලන දේශපාලනය ගැන උනන්දුවක් ඇති කරගන්න කරුණු යෙදුණේ කොහොමද යන්න සඳහන් කරන්න මා සතුටුයි. ඒ ගැන තොරතුරු ස්වල්පයක් තමුන්නාන්සේලා හමුවේ තබන්න මා

2-

තමුන්නාන්සේලාගේ අවසරය පතනවා. මා වයස අවුරුදු 15ක පමණ ශිෂ්‍යයෙකුව සිටියදි කථික තරගයක් සඳහා එක්තරා ගද්‍ය ඛණ්ඩයක් කටපාඩම් කරන්න මට සිද්ධ වුණා. මේ ගද්‍ය ඛණ්ඩය අරගෙන තිබුණේ ශ්‍රීමත් පොන්නම්බලම් අරුණාචලම් මැතිතුමා ලංකා ජාතික සංගමය (සිලෝන් නැෂනල් ඇසෝෂියේෂන්) ඉදිරියේ පවත්වපු කථාවකින්. එතුමා මේ කථාව පවත්වා තිබෙන්නේ වර්ෂ 1917 අප්‍රේල් මාසයේ 02 වැනිද. ඒ කථාවට විෂය වෙලා තිබෙන්නේ පළාත් පාලනය. ඒ පැරණි යුගයේත් ශ්‍රීමත් පොන්නම්බලම් අරුණාචලම් මැතිතුමා ඉතා දූරදර්ශීව කල්පනා කර තිබෙනවා. පළාත් පාලනය, පොදු මහජනතාව ඔවුන්ගේ කටයුතු ස්වාධීනව පාලනය කරගන්න යොමු කිරීමට උපකාර වන මහත් හැටියට, එතුමා ඒ කාලයේත් අවබෝධ කරගෙන තිබෙනවා. ජන්දයෙන් තෝරා පත් කරගත් පරිපාලකයින්ගෙන් යුක්ත කුඩා පාලන ඒකක නිසා රට ගොඩනැගීමේ කාර්යය ඉදිරියට යන බවට එතුමා තර්ක කර තිබෙනවා.

නමුත්, ඒ අවස්ථාවේ මා උනන්දුව දැක්වූයේ කථික තරගය ගැන පමණයි. ඒ සඳහා දුන් තෑග්ග දිනාගන්න මා තද උනන්දුවක් දැක්වූවා. ඒ වගේම එය දිනාගන්නත් මා සමත් වුණා. දැන් ආපසු හැරී කල්පනා කරනවිට, ඒ සිද්ධිය, පළාත් පාලනයත් සමග තිබෙන මගේ දීර්ඝ සම්බන්ධතාවේ ආරම්භය හැටියට මට පෙනෙනවා. ඊට අවුරුදු 11කට පස්සේ, වර්ෂ 1950 දී, වයස අවුරුදු 26 දී, මා කොළඹ මහ නගර සභාවට තේරී පත් වුණා. ඊට පසු කාලයේ දී මා දෙවරක් පළාත් පාලන අමාත්‍යවරයා ලෙස කටයුතු කළා.

අද මා පළාත් පාලනය කෙරෙහි තදබල විශ්වාසයක් තබාගෙන ක්‍රියා කරනවා. මගේ කල්පනාවේ හැටියට, මහජනතාවට රාජ්‍ය පාලන බලය බෙදාහදා ගැනීමේ ක්‍රියාවලියට සහභාගී වෙන්න පුළුවන් එකම මග එයයි. මේ විදියට දශක පහක් පමණ කාලයක් තිස්සේ මා කිසියම් ආකාරයකින් පළාත් පාලනය හා සම්බන්ධව ක්‍රියාකර තිබෙනවා. ශ්‍රීමත් පොන්නම්බලම් අරුණාචලම් මැතිතුමාගේ කථාවේ ඉතා දූරදර්ශී බවක් තිබෙනවා. අද පවත්නා ඒ තත්ත්වයටත් එතුමා කියන කරුණු බොහෝ සෙයින්ම අදාළයි. ඒ නිසා ඒ කථාවෙන් කෙටි ඡේදයක් උපුටා දක්වන්න මා සතුටුයි :

"මේ ආකාරයෙන් ප්‍රාදේශීය ස්වයං පාලනය ව්‍යාප්ත කළොත් මහජනයාට එයින් ඉතා වටිනා අධ්‍යාපනයක් ලැබෙනවා. එහි ප්‍රතිඵලය

ලෙසට සෑම පුද්ගලයෙකුටම රාජ්‍ය පාලන බලය පරිහරණයට හවුල් වෙන්න, ඒ බලය බුක්තිවිඳින්න අවස්ථාව ලැබෙනවා. මේ රට පාලනය කළ පැරණි රජ දරුවන් යටතේ එබඳු අවස්ථාවක් මහජනයාට ලැබී තිබුණා. ඔවුන්ගේ ජීවිතයට සම්බන්ධ ගමේ ඉතා සරල, සුළු අවශ්‍යතාවල පටන් ඔවුන් හොඳාකාර දනසිටි දේවල් පාලනය කර ගැනීමේ වගකීම ඔවුන්ට පැවරී තිබුණා. තවද පළාත් පාලනයට සම්බන්ධ වීමෙන්, පොදු කටයුතුවලදී සහයෝගයෙන් ක්‍රියා කිරීමේ පුරුද්ද ඔවුන් තුළ වැඩෙනවා..... දැන් නිකරුණේ කාලය ගත කිරීමෙන් අපතේ යන ඔවුන්ගේ ශක්තිය, එහෙම නැත්නම්, පවුල් ආරාවුල්වල යෙදිලා නඩුහබ කීමෙන්, බීමත්කමින් හා වෙනත් දුරාචාරවල යෙදීමෙන් අපතේ යන ඔවුන්ගේ ශක්තිය, ප්‍රයෝජනවත් දේට යොදන්න පුළුවන් අවස්ථාවක් එයින් ලැබෙනවා. සමාජයේ සිටින අධ්‍යාපනය ලබපු බොහෝ දෙනාගේ බුද්ධියත්, පරාර්ථකාමී හැඟීමත් ජනතා සුබසිද්ධිය සඳහා ඵලදායීව උපයෝගී කර ගන්න එයින් අවස්ථාව ලැබෙනවා. ජනතාවගේ එම කුසලතා උපයෝගී කොට නොගත්තොත් එය, ප්‍රතිපත්තිය වරද්ද ගැනීමක් ; එමෙන්ම, ප්‍රයෝජනයට ගතහැකි ශක්තිය නිරපරාදේ අපතේ යැවීමක් වෙනවා."

අද, අප නව යුගයක එළිපත්තට පැමිණ සිටිනවා. පරණ පිළිවෙළේ පරිපාලන ක්‍රම සාර්ථක නොවන බව දැන් හොඳටම පැහැදිලියි. සමාජය ගැන අප සිතන පරණ පිළිවෙළ අනුව කටයුතු කරන්න බැරි බව ඊටත් වැඩිය පැහැදිලි වී තිබෙනවා. අපට තෝරාගන්න තිබෙන මාර්ග දෙක ඉතාම පැහැදිලියි – එක්කෝ අපට පැරණි ක්‍රමය අනුව වැඩකරලා විනාශයට මුහුණ දෙන්න පුළුවන් ; නැත්නම්, අළුත් උපායමාර්ගයක් අනුව ප්‍රතිසංවිධානයක් කර නොබිඳී ජීවත් වෙන්න පුළුවන්. ඒ නිසා තමයි, අපේ රජය, පරිපාලන තන්ත්‍රය ප්‍රතිසංවිධානය කිරීමේ ප්‍රතිපත්තියක් අනුගමනය කරන්න පටන් අරගෙන තිබෙන්නේ. ඒ නිසා තමයි, අප නව මාර්ග සොයාගෙන ඒවා ඔස්සේ ගමන් කරන්නේ.

අප පටන්ගෙන තිබෙන මේ විප්ලවය සම්පූර්ණ කරන්න යම් කලක් ගත වෙනවා. අප බලාපොරොත්තු වෙන්නේ, අවිහිංසාව මාර්ගයෙන් අවශ්‍ය වෙනස ඇතිකර ගන්න. මේ සඳහා අපේ ආකල්පවල, ආයතනවල පරිවර්තනයක් කළ යුතුව තිබෙනවා. සියල්ලටම වැඩිය, අපේ ජනතාව අතර සෑම කොටසකගේම සහභාගිත්වය ඇතිවයි, අප මේ වෙනස කරන්න බලාපොරොත්තු වෙන්නේ.

මේ ප්‍රයත්නයේදී පළාත් පාලන ක්‍රියාවලිය විසින් ඉතා වැදගත් කාර්යභාරයක් ඉටු කළ යුතුව තිබෙනවා. ජනතාවට කිට්ටුම පාලනය තමයි, පළාත් පාලනය. ඉතාම මූලික පිළිවෙළේ සේවයක් පළාත් පාලනයෙන් ජනතාවට ඉටු වෙනවා. වාසස්ථානයට ඉතාම සමීප කටයුතු තමයි, පළාත් පාලන යන්ත්‍රයෙන් ඉටු වෙන්නේ. එය ජනතා සේවයේ අත්තිවාරම හැටියට හඳුන්වන්න පුළුවන්. පළාත් පාලනය කේන්ද්‍රස්ථානය හැටියට නොසැලකුවොත්, අපට සමාජයේ කිසිම පරිවර්තනයක් ඇති කරන්න බැහැ.

අපේ වැඩපිළිවෙළවල්වල බොහෝ ප්‍රතිසංස්කරණ ඇති කළ යුතුව තිබෙනවා. පළමු කොටම, අභිමතය අනුව බලතල පාවිච්චි කිරීමේ ප්‍රශ්නයට අපේ අවධානය යොමු වෙන්න ඕන. රාජ්‍ය සේවයේත්, පළාත් පාලන සේවයේත් තනතුරු දරන අය බොහෝ අවස්ථාවල, එමෙන්ම බොහෝ කාලයක සිටම, තම අභිමතය අනුව බලතල පාවිච්චි කිරීමට තිබෙන ඉඩකඩ අයථා අන්දමට පාවිච්චි කර තිබෙනවා. අප තීරණයක් ගන්නා විට ක්‍රියාකළ යුත්තේ අපේ පෞද්ගලික කැමැත්ත නොකැමැත්ත අනුව නොවෙයි – ප්‍රතිපත්තියක් අනුවයි. සෑම මට්ටමකම විධායක තනතුරු දරන අය, පෞද්ගලික කාරණා සැළකිල්ලට අරගෙන තීරණ ගන්නේ නැතිව, හොඳ ප්‍රතිපත්ති අනුව ක්‍රියා කරන්න ඕන. මහජන කටයුතු කෙරෙන සෑම අංශයකම සිදුවන අයථා ක්‍රියා තුරන්කර දමන්න මගේ රජය දන් පියවර ගන්නවා. කාර්යක්ෂම ප්‍රජාතන්ත්‍රවාදය යටතේ රජයේ ගුණාත්මක අගය වැඩිදියුණු වෙන්න ඕන ; රජයේ සියළුම සේවාවන්ගේ ගුණාත්මක අගය වැඩිදියුණු වෙන්න ඕන.

තීරණාත්මක වශයෙන්ම යපහතට හේතුවන බැරෑරුම් කර්තව්‍යයන් ඉටු කරන්න යම් රටකට අවස්ථාව ලැබෙන්නේ කලාතුරකින්. ඇතැම්විට, කණගාටුදායක සිද්ධිවල පීඩාවත් අසහනයත් ඔස්සේ තමයි, රටක් ගොඩනැගීමේ අවස්ථාව එළඹෙන්නේ. ඇතැම්විට කළු වලාකුළු වටා රිදී රේඛා තිබෙන බව අප දන්නවා. මෑතදී අපේ රට ඉමහත් දුක් වේදනා කම්කටොළුවලට මුහුණ දුන්නා. අපේ බොහොමයක් ආයතනවල තිබෙන දුබලකම, ඒවායේ ඇතිව තිබෙන පිරිහීම දැන් බොහෝදෙනාට අවබෝධ වී තිබෙනවා. අප මේ අවස්ථාවෙන් නොවරදවාම ප්‍රයෝජනය ගන්න ඕන. ප්‍රතිසංස්කරණය කළ යුතුව තිබෙන දේ ප්‍රතිසංස්කරණය කරන්න ඕන. අර්ථවත්, ප්‍රගතිශීලී දේ අප පණගන්වන්න ඕන. අපේ ප්‍රගතියට බාධා වී තිබෙන දේ අප අතහැර දමන්න ඕන.

නාධිපති කාර්යාලය
පුස්තකාලය

ජනතා සම්පත් උපයෝගී කර ගන්නා පළාත් පාලනය, එමෙන්ම, ජනතා හිතවාදී පළාත් පාලනය තමයි, අපේ අරමුණ. අතීතයෙන් දායාදව් තිබෙන ප්‍රඥාව ගැනත්, නූතන අත්දැකීම් ගැනත් අප සැළකිලිමත් වෙන්න ඕන. අපේ ආසියාතික ශිෂ්ටාචාරයේ තොටිල්ල තමයි, ඓතිහාසික දකුණු ආසියාව. මේ දකුණු ආසියාවේ "පංචයාත්" ක්‍රමය යටතේ සෑම ගමක්ම ප්‍රාදේශීක ස්වයං පාලනයෙන් යුක්ත ඒකකයක් හැටියට පැවතුණා. ඒ වාගේම, බටහිර ශිෂ්ටාචාරයේ තොටිල්ල තමයි, පුරාතන ග්‍රීසිය. පුරාතන ග්‍රීසියේ කුඩා නගර රාජ්‍යවල පොදු මහජනයා ප්‍රාදේශීක ප්‍රජා කටයුතු පාලනයෙහි නිරතව සිටියා. යහපත් රාජ්‍ය පාලනය නම්, පොදු මිනිසා තුළ උද්‍යෝගයක් ඇති කරන්න සමත් වන රාජ්‍ය පාලනය බව අපේ පැරණියෝ දැන සිටියා. මහත්මා ගාන්ධිතුමාත්, අපට මේ සත්‍යය නිතර මතක්කර දුන්නා. අනාගතයේ දී තමන්ගේ රට තුළ ස්වයං පාලනයෙන් යුක්ත ග්‍රාමීය ජනරජ ගණනාවක එකතුවෙන් නිර්මාණය වන පොදු රාජ්‍ය මණ්ඩලයක් බිහිවීම මහත්මා ගාන්ධිතුමා බලාපොරොත්තු වුණා.

මේ කාලයේ පාලන තන්ත්‍රය පිළිබඳ සංවිධාන විශාල ප්‍රදේශ වැළඳගැනීම නිසා රාජ්‍ය පාලනය මහජනයාගෙන් පැහැර ගැනීමක් සිදුවී තිබෙනවා. පළාත් පාලනය මහජනයාගෙන් ඈත්වුණු කටයුත්තක් බවට පත් වී තිබෙනවා ; එදිනෙදා ජීවිතයට සම්බන්ධ නැති දෙයක් බවට පත්ව තිබෙනවා. මේ තත්ත්වය නිසා මහජනයා තුළ කලකිරීමකුත්, අවිශ්වාසයකුත් ඇති වෙනවා ; ආත්මාර්ථකාමීකම වැඩි වෙනවා ; ප්‍රජා ජීවිතය සම්බන්ධ අභිමානය අඩු වෙනවා.

කලකිරීම, අවිශ්වාසය, උදාසීනත්වය වළක්වන්නට තිබෙන එකම මග තමයි, පාලන කටයුතුවලට තිබෙන සහභාගීත්වය වැඩි කිරීම. අප නැවතත් රාජ්‍ය පාලනය මහජනයා අතට දෙන්න ඕන. ප්‍රජා ජීවිතය ගැන අභිමානය නැවතත් මහජනයා තුළ ඇති කරන්න ඕන. ස්වයං පාලනයෙන් යුක්ත පළාත් පාලන ආයතන තුළ උද්‍යෝගය වර්ධනය වෙනවා. සෑම පුරවැසියෙකුටම තමන්ගේ ප්‍රදේශයේ වැඩ කටයුතු කළමනාකරණය කර ගැනීම අතින් යම් වගකීමක් දරන්න සිදුවුණොත්, කාර්ය සාධනයේ ලොකු දියුණුවක් ඇති වෙනවා නිසැකයි. රාජ්‍ය පාලන කටයුත්තට තමනුත් සහභාගිවන බවට යමෙකු තුළ හැඟීමක් ඇති වුණොත් එය තමන්ගේම කටයුත්තක් හැටියට ඔහුට හැඟෙනවා.

අපේ තරුණ තරුණියන්ට මේ අත්දැකීම විශේෂයෙන්ම වැදගත් වන බව අප සැලකිල්ලට ගන්න ඕන. ඒ වගකීම දැරීමෙන් ඔවුන් රාජ්‍ය පාලන කාර්යයට පුහුණුවක් ලබනවා. මේ අත්දැකීම හේතුකොටගෙන දක්ෂ පක්ෂකම් තිබෙන තරුණ තරුණියන් වැඩි වැඩියෙන් ජනතා සේවයට කැපවුණු පොදු ජීවිතයට පිවිසෙනවා. ගැමි ජනතාවට මේ නිසා ලැබෙන්නේ ලොකු ශක්තියක්. ඒ ශක්තිය නිසා ඔවුන්ට බලයක් ලැබෙනවා ; නිලධාරී ග්‍රහණයෙනුත්, ආයතනවල ඒකාධිපති කමෙනුත් මිදෙන්න ඔවුන්ට පුළුවන් වෙනවා. එපමණක් නොවෙයි. එහි ප්‍රතිඵලය ලෙසට සියලුදෙනාටම ලැබෙන සේවය වඩාත් උසස් තත්ත්වයටත් පත් වෙනවා.

**නිර්මාණශීලී නව මාර්ග ගන්නට අප පසුබට නොවිය යුතුයි. නිර්මාණශීලී ප්‍රතිසංවිධාන තුළින් අපට, ජනතාවගේ දුක සැප වඩාත් ඕනෑකමින් බලන, ජනතා හිතවාදී පළාත් පාලන තන්ත්‍රයක් ඇති කරගන්න පුළුවන්. කුඩා පාලන ඒකක තමයි, හොඳ පාලන ඒකක වන්නේ. කුඩා පාලන ඒකක තමයි, පොඩි මිනිසුන්ට ප්‍රජා කටයුතුවල යෙදෙන්න ධෛර්ය දෙන්නේ. රාජ්‍ය පාලන තන්ත්‍රය පුද්ගලයා ගැන හැඟීමක් ඇති මානුෂික සංවිධානයක් බවට පත් වන්නේ ඒවා නිසයි. ජනතාවට අසම්බන්ධ වූ, ඈත් වූ, ඒ නිසාම ජනතා සුහදත්වයෙන් බැහැර පළාත් පාලන තන්ත්‍රය තරම් දරුණු ආඥාදායකත්වයක් තවත් ඇතැයි කියන්න බැහැ. එබන්දක් ඇතිවීම කෙසේ නමුත් වළක්වන්න ඕන. එය මගේ රජයේ ප්‍රතිඥාවක්. ඒ ප්‍රතිඥාව අප සහතික වශයෙන්ම ඉටු කරනවා.**

කොළඹ මහ නගර සභාව මේ වැඩපිළිවෙලේ පෙරමුණ ගන්න ඕන. කොළඹ මහ නගර සභාව නගරවාසීන් කෙරෙහි වගකීමක් දරනවා. ඒ වාගේම මුළු රට සම්බන්ධයෙන් එය ඊටත් වඩා විශාල වගකීමක් දරනවා. මේ රටේ තිබෙන වඩාත්ම පැරණි පළාත් පාලන ආයතනය හැටියටත්, ප්‍රධානම පළාත් පාලන ආයතනය හැටියටත් එය විශේෂ තැනක් ගන්නවා. එය, පළාත් පාලන කාර්යයේ සාර්ථකත්වය පිළිබිඹු කරන " බැරෝමීටරයක " ස්වරූපය ගන්නවා. විශාලම පළාත් පාලන ආයතනය ලෙසට එය අනිකුත් පළාත් පාලන ආයතනවලට ආදර්ශයක් විය යුතුයි. ආදර්ශයක් සපයන ආයතන හැටියට ඊට අවශ්‍ය විනය, අනලස්කම, දූරදර්ශී බව කියන මේ ගුණාංග කොළඹ මහ නගර සභාව වඩ වඩාත් වර්ධනය කරගන්න ඕන.

මහජනයා තමන්ගේ ඡන්දයෙන් තෝරා පත්කර ගන්නා පළාත් පාලන ආයතනය තමයි, පොදු ජීවිතය සඳහා අපට අවශ්‍ය කරන උසස්ම සාරධර්ම අත්හදා බැලෙන ස්ථානය. ශ්‍රී ලංකාවේ ඒකීයත්වයට පදනම වන සාරධර්මය වන්නේ, ජනවාර්ගික සමගි සමාදානයයි. කොළඹ මහ නගර සභාවේ වැඩ කළ අය මේ බව සැමවිටම තේරුම්ගෙන සිටිනවා. කොළඹ මහ නගර සභා ප්‍රදේශයේ ඡන්ද දායකයින්ගේ ස්වභාවය එම අවබෝධය ලබන්න උපකාර වී තිබෙනවා. මේ සාරධර්මය කොළඹ මහ නගර සභාව තුළ අද ජීවමානව තිබෙන සැටි මුළු රටටම දකගන්න පුළුවන්. එයින් මුළුමහත් රටටම පාඩමක් ඉගෙනගන්න පුළුවන්. එම තත්ත්වය සදාකල්හිම පවතීවා කියා මා ප්‍රාර්ථනා කරනවා.

මහත්මා ගාන්ධිතුමා මෙසේ කියා තිබෙනවා : " රාජ්‍ය පාලනයේ හදවත පළාත් පාලනයයි. හදවත හොඳහැටි වැඩ කරන්නේ නැත්නම්, අනිත් හැම දෙයක්ම හොඳින් කෙරෙයිද ? මහත්මා ගාන්ධිතුමා කී දෙය හරියටම හරි. ඒ නිසා තමයි, මේ අවස්ථාවේ අප කොළඹ මහ නගර සභාවට ප්‍රශංසා කරන්නේ. කොළඹ මහ නගර සභාව අනාගත අභියෝගවලට මුහුණදෙන විට අප එයින් වඩාත් විශිෂ්ඨ කාර්යභාරයක් බලාපොරොත්තු වෙන්නේ ඒනිසයි.

ස්තුතියි.

## கொழும்பு மாநகர சபையின் 125 ஆவது ஆண்டு விழாவின்போது அதிமேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஆற்றிய உரை
## 1990.12.15

கொழும்பு மாநகர சபையானது 125 ஆண்டுகளாகப் பொதுமக்கள் பணியில் ஈடுபட்டுள்ள எமது நாட்டின் பிரதான உள்ளூராட்சி நிறுவனமாக விளங்கி வந்துள்ளது. எமது அரசியல் வளர்ச்சியின் பிரதிபிம்பமாகவும் அது திகழ்ந்து வருகின்றது. காலனித்துவ காலத்திலிருந்து இன்றுவரை இந்த நாடு கண்ட முன்னேற்றங்கள் யாவும் கொழும்பு மாநகர சபையின் அமைப்பினையும் இயல்பினையும் மாற்றியுள்ளது.

இந்த வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு எனக்கு விடுக்கப்பட்டுள்ள உங்கள் அழைப்பு எனது சொந்த வாழ்வுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. அரசியல்வாதியென்ற வகையில் நான் உள்ளூராட்சி முறையால் கட்டிவளர்க்கப்பட்டவனாவேன். கொழும்பு மாநகர சபையிலிருந்து அரசியல் பயிற்சியினைப் பெற்றவனாவேன். இந்த மாநகர சபையில்தான் எனது ஆரம்பகால அரசியல் போக்குகள் உருவாக்கப் பட்டன. எனது ஆரம்பகால அரசியல் பாடங்கள் யாவற்றையும் இங்கேயே கற்றுக்கொண்டேன். நகர மக்களது மதிப்புகள் பற்றிய முக்கியத் துவத்தினை நான் இந்த மாநகர சபையில்தான் படித்துக்கொண்டேன். பொதுமக்களது பிரதிநிதிகளாகப் பணிசெய்யக் கருதுபவர்கள் அனைவருக்கும் பொதுவான ஓர் உண்மையினை நான் இங்குதான் அறிந்து கொண்டேன். விழுமியங்களை ஆதாரமாகக் கொண்ட அரசியல்தான் அர்த்தமுள்ள அரசியலென்பது நான் கற்றுக்கொண்ட உண்மையாகும். அந்த அறிவினைப் பெறுவதற்கு மிகப் பொருத்தமான இடம் உள்ளூராட்சித்துறையாகும்.

உள்ளூராட்சியில் நான் கொண்டிருந்த ஆர்வத்தினை உங்களுக்கு எடுத்துரைக்க அனுமதி அளியுங்கள். நான் பதினைந்து வயதுடைய இளைய மாணவராக இருந்த காலத்திலே பேச்சுப் போட்டி

யொன்றுக்காக ஒரு பந்தியை மனப்பாடம் செய்யவேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. அந்தப் பந்தியானது 1917 ஏப்பிரல் மாதம் 02 ஆந் திகதியன்று இலங்கை தேசிய அவையில் சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் ஆற்றிய ஒரு சொற்பொழிவிலிருந்து எடுக்கப் பட்டிருந்தது. அந்தப் பந்தி உள்ளூராட்சி முறைபற்றிய தொன்றுகும். அந்தப் பழைய காலத்திலும் உள்ளூராட்சி முறையானது பொதுமக்கள் தமது விவகாரங்களைத் தாமே நிருவகிக்கும் ஒரு வழி முறையாக அமைய வேண்டுமென, நீள் நோக்குடைய சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் அறிந்திருந்தார். தெரிவுசெய்யப் பெற்ற நிருவாகத்தினர் அங்கம்வகிக்கும் சிறிய கூறுகளின்மூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியினை மேற்கொள்ள வேண்டுமென்று அவர் வாதித்தார்.

அந்த நேரத்தில் நான் பேச்சுப்போட்டியில் வெற்றிபெறுவது பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். நான் எதிர்பார்த்தவாறு எனக்குப் பரிசொன்றும் கிடைத்தது. இப்பொழுது பின்னோக்கிப் பார்க்குமிடத்து உள்ளூராட்சித்துறையோடு எனக்குள்ள நீண்ட தொடர்பு அந்த நிகழ்ச்சியோடு ஆரம்பமாகிற்று என்பது விளங்குகின்றது. அந்த நிகழ்ச்சியின் பதினொரு வருடங்களுக்குப் பின்னர் 1950 ஆம் ஆண்டில் நான் சுமார் 26 வயதுடையவராக இருந்த காலத்தில் கொழும்பு மாநகரசபையின் உறுப்பினரொருவராகத் தெரிவுசெய்யப் பட்டேன். பிற்காலத்தில் நான் உள்ளூராட்சி அமைச்சராக இரண்டு முறை நியமிக்கப்பட்டேன்.

அன்றுதொட்டு நான் உள்ளூராட்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட வனாக இருக்கின்றேன். தத்துவங்களைப் பகிர்ந்துகொள்ளல் சம்பந்தமான அடிப்படையான முறையில் எமது மக்கள் மிக எளிதில் பங்குபற்றக்கூடிய ஒரேயொரு நிருவாகமுறை இதுவென்பது எனது கருத்தாகும். இங்ஙனம் சுமார் ஐந்து தசாப்தங்களாக எந்தவிதத்திலாவது எனக்கும் உள்ளூராட்சி நிருவாகத்துக்கும் தொடர்பு நிலவி வருகின்றது.

சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களது சொற்பொழிவு இன்றைய நிலைமைக்கும் ஏற்புடையவாறு அமைந்த தீர்க்கதரிசனம் கொண்ட பேச்சாகும். எனவே அந்தப் பேச்சிலிருந்து சிறு பந்தியொன்றை எடுத்துரைக்க விரும்புகின்றேன். அது வருமாறு :

"...... இந்த வழிகளில் உள்ளூர் சுயாட்சி முறையினை விஸ்தரிப்பதன்மூலம் பொதுமக்களுக்குச் சிறந்த பயிற்சியைப்

பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன், எமது நாட்டு அரசர்களின் கீழ், நிலவிய கிராமசபை நிருவாக முறைக்கு ஒத்த அதிகாரத்தை அனைவரும் பகிர்ந்துகொள்ளும் நிலையும் ஏற்படுகின்றது. அந்தக் கிராமசபை நிருவாக முறையின்கீழ், கிராம மக்களுக்கு நன்றாகத் தெரிந்த விடயங்களைத் தாமே நிருவகித்துக்கொள்ளும் வாய்ப்பு இருந்தது. அத்துடன் பொது நோக்கங்களுக்காக ஒத்துழைத்து நடந்துகொள்ளும் பயிற்சியினையும் அக்கிராம மக்கள் பெற்றுக் கொண்டார்கள். . . . . . உள்ளூர் மட்டத்திலான சுயநிருவாகத்தில் பொதுமக்கள் ஈடுபாடு கொள்ளுமிடத்து அவர்களுக்கு இயல்பான சோம்பல் நிலையற்றுப் போகின்றது. அத்துடன் கலகங்களைச் செய்யவும், வழக்காடவும், மது அருந்தவும், ஏனைய குற்றங்களைச் செய்யவும் பயன்படுத்தப்படும் மக்களது சக்தியினை நல்வழிப்படுத்தவும் முடியும். மேலும் கல்வியறிவுள்ள மக்கள் பலரது அறிவினையும் தொண்டுசெய்யும் மனப் பான்மையினையும் சமுதாயத்தின் நலனுக்காக பயன்படுத்திக்கொள்ளவும் முடியும். சக்தியை வீணாக்காதே என்ற பழமொழியும் உண்டு."

இன்று, நாங்கள் புதிய சகாப்தமொன்றின் ஆரம்ப காலகட்டத்தில் இருக்கின்றோம். பழைய நிருவாக முறைகளை மாற்றமெதுவுமின்றி பேணமுடியாதென்பதை மிகத் தெளிவாகக் காணக்கூடியதாக இருக் கின்றது. அவ்வாறே சமுதாயம்பற்றி நாம் கொண்டுள்ள அபிப் பிராயங்களையும் மாற்றமெதுவுமின்றி பேணப்பட முடியாதென்பதும் மிகத் தெளிவாகி உள்ளது. பின்வருவனவற்றிலொன்றை நாங்கள் தெரிவு செய்யவேண்டியவர்களாக உள்ளோம். பழைய வழிமுறைகளை இடையறாது பேணுவதால் நாங்கள் அழிவினைத் தேடிக்கொள்ளலாம். அல்லது புதிய அணுகுமுறையொன்றின் கீழ் எங்களைத் திருத்திக் கொள்வதனால் நீண்டு வாழலாம். அதனால்தான், எமது அரசாங்கம் மீளமைப்புச் செய்யும் கொள்கையொன்று ஆரம்பித்துள்ளது. அதனால் தான் நாங்கள் புதிய வழிமுறைகளைக் கண்டுபிடித்து அவற்றை நடைமுறைப்படுத்த ஆவன செய்து வருகின்றோம்.

நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ள புரட்சி பூரணத்துவம் அடைவதற்குச் சிலகாலம் செல்லும். நாங்கள் அகிம்சாவழியினைத் தழுவிய மாற்றங்களை எதிர்பார்க்கின்றோம். மனப்பான்மைகளையும் அமைப்பு முறைகளையும் நாங்கள் மாற்றுதல் வேண்டும். சமுதாயத்தில் உள்ள மக்கள் அனைவரினதும் பங்குபற்றுதலுடன் இந்த மாற்றங் களைச் செய்வதற்கு நாங்கள் கருதுகின்றோம்.

இந்த முயற்சியின் நிறைவேற்றத்துக்காக உள்ளூராட்சி நிருவாகம் பாரிய கடமைப் பங்கினை ஆற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உள்ளூராட்சியானது பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட

நிறுவனமுறையாகும். மக்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அது ஈடுபட்டு உள்ளது. அது மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பணிகளைக் கையாண்டு வருகின்றது. பகிரங்கச் சேவையின் அடித்தளமாகவும் உள்ளூராட்சி அமைந்துள்ளது. உள்ளூராட்சிக்குள்ள நிருவாக முக்கியத்துவத்தினை புரிந்து கொள்ளுவதற்குத் தவறுமிடத்து எமது சமுதாயத்துக்குப் புதிய மாற்றங்கள் எவையேனும் புகுத்தப்பட முடியாது.

சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. முதலாவதாக, தன்விருப்புரிமைத் தத்துவங்களைப் பிரயோகித்தல் பற்றிய விடயத்தை நாங்கள் ஆராய வேண்டும். அரசாங்கத்திலும் உள்ளூராட்சியிலும் சேர்ந்த உத்தியோகத்தர் பலரால் பலகாலமாக அளவுகடந்த முறையில் இந்தத் தன்விருப்புரிமைகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தீர்மானங்களுக்குக் கொள்கைகள்தான் வழிகாட்ட வேண்டும். தனிப்பட்ட விருப்புரிமைகளால் தீர்மானங்கள் எடுக்கப்படலாகா. எல்லா மட்டங்களிலுமுள்ள நிறைவேற்றுப் பணிகளுக்குப் பொறுப்பானவர்களுக்கு கோட்பாடு கள்தான் வழிகாட்டல் வேண்டும். தனிப்பட்ட அபிப்பிராயங்கள் வழிகாட்டக் கூடாது. எல்லாச் செயற்பாட்டுத் துறைகளிலும் நிகழ்ந்து வருகின்ற தவறான பிரயோகங்களைச் சரிப்படுத்துவதற்கு எனது அரசாங்கம் இப்பொழுது நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அரசாங்கச் சேவைகளையும் அவற்றின் தரத்தினையும் பயன்கூர்முறையில் மேம்படுத்துவதற்கு உறுதியான சனநாயகமுறை தேவைப்படுகின்றது.

சந்தர்ப்ப வாய்ப்புகள் ஒரு நாட்டின் வரலாற்றிலேயே அரிதாகத்தான் தோற்றமெடுக்கின்றன. சில சமயங்களில் பாதிப்புகள் காரணமாகவும் அவலநிலைகளின் கொந்தளிப்புக் காரணமாகவும் அவை தோற்றமெடுக்கின்றன. சில சமயம் கருமேகங்களிலும் வெள்ளைக் கோடுகள் தென்படுகின்றன. அண்மைக் காலங்களில் எமது நாடு பல வேதனை தரும் இன்னல்களால் பாதிப்புற்றிருந்தது. எமது நிறுவன அமைப்புகளின் பலவீனங்களையும் சீர்குலைவுகளையும் பலர் சாதாரணமானவையென ஏற்றுக்கொண்டுள்ளனர். மக்களது இந்த மனோபாவத்தினை நாங்கள் உடனே பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். எமது நிறுவனங்களை மீளமைப்புச் செய்வதற்கு அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அர்த்தபுஷ்டியானதும் முன்னேற்ற முடையதுமானவற்றுக்கு நாங்கள் புத்துயிர் அளித்தல் வேண்டும். முன்னேற்றத்துக்குத் தடையாகவிருந்தவற்றை நாங்கள் கைவிட வேண்டும்.

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

பொதுமக்களது பங்குபற்றலுடையதும் பொதுமக்களது நலனில் அக்கறை காட்டுவதுமான உள்ளூராட்சி முறையொன்றை உருவாக்குவது எமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும். எமது ஆன்றோர்களின் அறிவினையும் நவீன விஞ்ஞான அறிவினையும் நாங்கள் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த எமது ஆசிய நாகரீகத்தின் பிறப்பிடமான தென்ஆசிய நாடுகளில் அன்று நிலவிய பஞ்சாயத்து முறையால் ஒவ்வொரு கிராமத்திலும் மக்களது சுயாட்சியை உறுதிப்படுத்திய நிருவாகப் பிரிவொன்று அமைக்கப்பட்டிருந்தது. மேற்குத் திசை நாகரீகத்தின் பிறப்பிடமான பண்டைய கிரேக்க தேசத்தில் சிறுநகர அரசுகளின்மூலம் உள்ளூராட்சிப் பணிகளில் பொதுமக்களுக்குப் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது. அண்ணல் காந்தி அவர்கள் பலமுறை கூறியுள்ளவாறு பொதுமக்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்கமே சிறந்த அரசாங்கம் என்பதை நமது முன்னோர்கள் நன்கு அறிந்திருந்தனர். எமது வருங்காலம் சுய ஆட்சியுடைய கிராமக் குடியரசுகளின் பொதுஒன்றியமாகத் திகழ வேண்டுமென அண்ணல் காந்தி கனவு கண்டார்.

இன்றைய காலங்களில் அதிகார எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளமையால் நிருவாக அதிகாரம் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சியானது மக்களிடமிருந்து வெகு தூரத்தில் இடம்பெற்று வருகின்றது. உள்ளூராட்சியானது மக்களது அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதன் காரணமாக, மக்களிடையில் உறவற்ற தன்மையும் அவநம்பிக்கையும் ஏற்படுகின்றன. அதனால் வெறுப்பு ஏற்படுகின்றது. அதனால் சுயநலம் அதிகரித்து மக்களது தன்னம்பிக்கை குறைகின்றது.

மனவிரக்தி, அவநம்பிக்கை, அசட்டை செய்தல் ஆகிய சமூக வியாதிகளைக் குணப்படுத்துவதற்குப் பொதுமக்களது பங்குபற்றுதலை அதிகரித்தல் வேண்டும். நாங்கள் நிருவாக அதிகாரங்களைப் பொதுமக்களிடம் மீண்டும் கொடுத்தல் வேண்டும். மக்களிடமுள்ள தன்னம்பிக்கையினை அதிகரித்தல் வேண்டும். பொதுமக்களது பங்குபற்றுதலுடன் இயங்கும் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் மக்களுக்கு உற்சாகம் ஊட்டப்படலாம். தமது அலுவல்களை நிருவகிப்பதுடன் சம்பந்தப்பட்ட குறிப்பிட்டவொரு பொறுப்பு குடிமக்கள் யாவருக்கும் உள்ள பொழுது செயல்நிறைவேற்றுகை துரிதமாக நடைபெறும். அரசாங்கத்தில் தமக்கும் பங்குடைமையுள்ளதென்ற எண்ணம் ஒருவருக்கு ஏற்படுமிடத்து அந்த அரசாங்கத்துடன் அவர் ஐக்கியமாகி விடுவார்.

நிருவாகத்தில் பொதுமக்கள் பங்குபற்றுதல் இளைஞர்களைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானதாகும். ஆட்சிப் பணிகளில் இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு அது உதவும். அதன் காரணமாக, அரசாங்க வேலைகளுக்குப் புதிய திறமையுள்ளவர்களையும் ஆற்றல் மிக்க இளைஞர்களையும் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்தகைய அரசாங்கமானது கிராம மக்களுக்கு மிகுந்த சக்தியை வழங்கக் கூடியதொன்றாகும். அது அவர்களுக்கு நாட்டின் அலுவல்களைக் கண்காணிப்பதற்கு வேண்டிய தத்துவங்களை அளிக்கின்றது. பணித்துறையாட்சியின் ஆதிக்கத்திலிருந்தும் நிறுவன ஏகாதிபத்தியத்திலிருந்தும் விடுதலை பெறுவதற்கு அது பொதுமக்களுக்கு உதவும். மக்கள் அனைவருக்கும் சிறந்த சேவையினை வழங்குவதற்கும் அது உதவும்.

புதிய வழிமுறைகளைக் கண்டுகொள்ள நாங்கள் தயங்கக் கூடாது. ஆக்கபூர்வமான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதன்மூலம் மக்களது நலனைக் காக்கின்ற உள்ளூராட்சி முறையொன்றை ஏற்படுத்திக் கொள்ளலாம். சிறிய கூறுகள் சிறந்த கூறுகளாகும். அவை, பொதுப் பணிகளில் ஈடுபாடு கொள்வதற்குப் பொதுமக்களுக்கு ஊக்கம் அளிப்பன வாகும். அவை நிருவாகத்தைப் பொதுமக்களுக்குரிய சொத்தாக மாறுகின்றன. பொதுமக்களுடன் சம்பந்தமில்லாத உள்ளூராட்சியானது மிக மோசமான நிருவாக அராஜகமாகும், அத்தகைய நிருவாக முறையொன்று ஒழிக்கப்படுதல் வேண்டும். இது எனது அரசாங்கத்தின் பாற்பட்ட கடமையாகும். அந்தக் கடப்பாட்டினை நாங்கள் நிறைவேற்றியே தீருவோம்.

கொழும்பு மாநகர சபை இப்பணியினை முன்னின்று நிறைவேற்றுதல் வேண்டும். நகர மக்கள் அனைவரினதும் சார்பில் நிறைவேற்றப்பட வேண்டிய கடப்பாடு கொழும்பு மாநகர சபைக்கு உண்டு. அவ்வாறே எமது நாடு சார்பிலும் ஆற்றப்பட வேண்டிய கடப்பாடு அதற்கு உண்டு. இந்நாட்டிலுள்ள மிகப் பழைய பிரதான உள்ளூராட்சி அதிகார சபையென்ற வகையில் எமது நாட்டு உள்ளூராட்சி முறையின் வெற்றிக் கருவியாகவும் கொழும்பு மாநகர சபை விளங்குகின்றது. மிகப் பெரிய உள்ளூராட்சி அதிகார சபையாக இருக்கின்றமையால் அது ஏனைய உள்ளூராட்சிச் சபைகளுக்கு உதார்ணமாக விளங்குகின்றது. உதாரணமாகத் திகழவேண்டிய உள்ளூராட்சிச் சபையொன்றுக்கு இன்றியமையாத கடமை உணர்ச்சி, தளரா ஊக்கம், பரந்தநோக்கு ஆகிய பண்புகளை அது வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

மக்களுக்குச் சேவையாற்றுவதில் ஈடுபாடு கொண்டுள்ள நாங்கள் பேணிக்காக்க வேண்டிய அதியுயர் பெறுமானங்களைப் பரீட்சித்துப் பார்க்கும் ஒரு களமாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகள் விளங்குகின்றன. இலங்கையின் ஐக்கியத்தின் அத்திவாரமாக இனங்களுக்கிடையிலான சமூக உறவுகள் விளங்குகின்றன. கொழும்பு மாநகர சபையில் பணியாற்றியவர்கள் இதனை நன்கு அறிந்துள்ளனர். காரணம், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் வாழுகின்ற மக்கள் பல இனங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதேயாகும். இச்சிறந்த இனவொற்றுமை கொழும்பு மாநகர சபையால் பேணப்படும் விதத்தினைக் கண்டு அதனால் பயன்பெறக் கூடிய நிலையில் எமது நாடு இருக்கின்றது. இந்த நல்லுறவு என்றென்றும் நிலைத்து நிற்பதாகுக

" அரசாங்கத்தின் இதயமாக உள்ளூராட்சி முறை திகழுகின்றது. அந்த இதயம் சரியாக இயங்காவிடின் அரசாங்கத்தின் ஏனைய பகுதிகளும் சரியாக இயங்கமாட்டா. " என்ற மகாத்மா காந்தி அவர்கள் கூறியது முற்றிலும் உண்மையானதாகும். எனவேதான், இத் தருணத்தில் நாங்கள் கொழும்பு மாநகர சபைக்கு எமது பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றோம். எனவேதான், வருங்கால சவால்களைச் சமாளிப்பதிலும் கொழும்பு மாநகர சபை மேலும் சிறந்த முறையில் நடந்துகொள்ளும் என்ற நம்பிக்கை எங்களுக்குப் பிறக்கின்றது.

நன்றி

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

# ADDRESS OF HIS EXCELLENCY RANASINGHE PREMADASA, PRESIDENT, AT THE 125TH ANNIVERSARY CELEBRATIONS OF THE COLOMBO MUNICIPAL COUNCIL

**15th December, 1990**

For 125 years, the Colombo Municipal Council has served our people as the premier Local Government Institution of our country. It has been a mirror of our political development. From colonial to contemporary times, every step forward has been reflected in the structure and nature of the Colombo Municipal Council.

**Your invitation to me to participate in today's observance has deep personal significance. Politically, I am a child of Local Government. I am a graduate of the Colombo Municipal Council. It is here that my earliest political attitudes were forged. It is here that I learned early political lessons. It is here that I was taught the importance of values in civic society. It is here that I came to know a truth central for all those who seek a role in public life. Value – based politics is the only politics that matters. The best school for this education is Local Government.**

Allow me to share with you the story of my interest in Local Government. When I was a young student of about 15 years, we had to memorize a passage for an elocution contest. The passage was part of an address by Sir Ponnambalam Arunachalam given to the Ceylon National

Association. It was on the 2nd of April, 1917, that he had delivered this address. It concerned Local Government. In those far off times, Sir Ponnambalam Arunachalam, with great foresight, saw Local Government as a means of involving people in managing their own affairs. He argued that nation building would advance through smaller units of elected administrators.

At that time, my only interest was in the elocution contest. I was only keen to win a prize, which I did. Looking back now, I see that incident as the beginning of my long relationship with Local Government. Then, eleven years later, in 1950 when I was about 26 years of age, I was elected to the Colombo Municipal Council. Thereafter I became the Minister of Local Government twice.

Today, I remain committed to Local Government. In my view this is the only way in which our people can participate in the fundamental process of power sharing. So, in one way or another, for almost five decades, I have been associated with Local Administration. Sir Ponnambalam Arunachalam's speech was so visionary that it has a remarkable relevance even today. Therefore, I like to quote a short paragraph from it.

**"....Extension of Local Self-Government on these lines will be a valuable education to the people. It would give every man a share in the power, which under our native sovereigns he had, of guidance over the things which he understands, beginning with the small and simple interests of his village, and would train him anew in habits of co-operation for public purposes ....... It would find an outlet for energies now wasted among the masses in idleness, or misused in feuds and**

**litigation, drink and crime. It would enlist in the service of the community and turn to good account the intelligence and public spirit of the large educated class whom it is bad policy as well as sheer waste of power not to utilize".**

Today, we are on the threshold of a new era. It is abundantly evident that the old ways of administration do not work. It is even more evident that the old ways of thinking about society do not work. The choice is clear. Either we continue the old ways and collapse or we restructure through a new approach and survive. That is why our Government has begun a policy of restructuring; that is why we seek and implement new pathways.

The revolution we have begun will take time to complete. We want non-violent change. We must transform attitudes and institutions. Above all we will do this with the participation of every segment of our people.

In this effort Local Government has a critical role to play. It is closest to the people. It serves society in very basic ways. It deals with functions that are nearest to the home. It is the sandbed of public service. There can be no change in our society unless we consider Local Government as the focal point.

**A great deal of reform is necessary. To begin with, we must address the question of discretionary powers. Too often and too long have many office-bearers in Government and in Local Government abused these discretions. Policy, not private preferences, must govern decisions. Principles, not personal considerations, must guide those entrusted with executive office at every level. My government is now taking steps to institute**

**measures to correct abuses in every area of activity. Effective democracy must effectively improve the quality and the services of government.**

Times of opportunity come rarely in the life of a country. Sometimes, they come from the stress and turmoil of sad events. Sometimes, dark clouds have silver linings. Our country has gone through much pain and misery recently. The weakness and the decay of many of our institutions is now accepted by most people. We must seize this opportunity. We must re-construct. We must renew what is meaningful and forward-looking. We must discard what has retarded progress.

**People-based and people-concerned Local Government is our aim. We must be heedful of ancient wisdom and modern experience. In historic South Asia, the cradle of our Asian civilisation, the panchayat system made every village a locally self-governing unit. In ancient Greece, the cradle of Western civilisation, little City-States involved people in local civic work. The ancients knew, as Mahatma Gandhi often reminded us, that good government was government that enthused the small man. Gandhiji saw the future in a vision of a Commonwealth of self-administered Rural Republics.**

In modern times, enlargement of areas of authority have stolen government from the people. Local Government has become something distant. It is something apart from daily life. It breeds alienation and distrust. It leads to indifference. It promotes selfishness and diminishes civic pride.

The only way to arrest alienation, distrust and indifference is to increase involvement. We must return-

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

government to the people. We must restore civic pride. Self-managed local authorities mobilize enthusiasm. When every citizen has some responsibility for managing their own affairs, performance will improve rapidly. When you feel that you have a share in government, it becomes your own.

For our young people, this is especially important. It trains them in the tasks of government. It will bring fresh talent and able young people into public life. For our rural people this is a great strength. It empowers them. It rescues them from bureaucratic domination and institutional dictatorship. It will improve the quality of services for all the people.

**Let us not hesitate to innovate. Through creative reform we can develop a caring, people-concerned Local Government. Small units are good units. They encourage small people to undertake civic work. They personalize government. Impersonal Local Government is the worst form of administrative tyranny. It should and it must be eliminated. This is a commitment of my Government. It is a pledge we will fulfill.**

The Colombo Municipal Council must be in the forefront of this drive. The Colombo Municipal Council has an obligation to the citizens of the city. It has a larger obligation to the country. As the oldest major Local Government body it is the barometer of Local Government success. As the largest Local Government body it is a model for others. It must develop the discipline, the diligence and the vision that makes it a model.

The elected local authority is the testing ground of the highest values we need for public life. The value of

communal harmony is the bed-rock of Sri Lanka's unity. Those who worked in the Colombo Municipal Council have always understood this – such is the composition of its constituency. It is a value that the country can observe in the Colombo Municipal Council and learn from it. Let it always be so.

**Mahatma Gandhi once said; "Local Government is the heart of government. If the heart does not work, what else will work well?" Mahatma Gandhi was correct. That is why, on this occasion, we congratulate the Colombo Municipal Council. That is also why we expect more from the Colombo Municipal Council as it faces the challenges of the future.**

**I thank you.**

ජනාධිපති ලේකම් කාර්යාලය
25 AUG 2023
කොළඹ